# கிறிஸ்த்து பிறப்பின் நற்செய்தி




குடும்பத்தில் சந்தோஷம்

# ஆலயத்தில் அலங்காரம்







1.மேய்ப்பர்களுக்கு சந்தோஷம

அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள்.



தேவதூதன் அவர்களை
நோக்கி: பயப்படாதிருங்கள்;
இதோ, எல்லா
ஜனத்துக்கும் மிகுந்த
சந்தோஷத்தை
உண்டாக்கும் நற்செய்தியை
உங்களுக்கு
அறிவிக்கிறேன்.
இன்று கர்த்தராகிய
கிறிஸ்து என்னும் இரட்சகர்
உங்களுக்குத் தாவீதின்
ஊரிலே பிறந்திருக்கிறார்
லூக்கா 2:10,11

தீவிரமாய்
வந்து,
மரியாளையும்,
யோசேப்பையும்,
முன்னணையிலே
கிடத்தியிருக்கிற
பிள்ளையையும்
கண்டார்கள்

லூக்கா 2.16



ப் பிள்ளையைக் குறித்துத் தங்க
சொல்லப்பட்ட சங்கதியைப்
பிரசித்தம்பண்ணினார்கள்.
மேய்ப்பராலே தங்களுக்குச்
சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரு
வைகளைக்குறித்து ஆச்சரியப்பட்ட

# 2.ஏரோதுவுக்கு கலக்கம்



ஏரோதுராஜா அதைக் கேட்டபொழுது, அவனும் அவனோடேகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள்.

மத்.2:3



அப்பொழுது ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு, மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலைசெய்தான்.

ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, தன் பிள்ளைகள் இல்லாதபடியால் அவைகளினிமித்தம் ஆறுதல் அடையாதிருக்கிறாள் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரே.31:15

# 3.ஞானிகளுக்கு வழி காட்டுதல்





யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம் என்றார்கள்.



ராஜா சொன்னதை அவர்கள் கேட்டுப் போகையில், இதோ, அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்குமேல் வந்து நிற்கும்வரைக்கும் அவர்களுக்குமுன் சென்றது.மத்2:9



பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள். மத்.2:11

உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்.
எரேமியா 29:13


Happy
Christmas
To You and your Family